தொலைபேசி இல./Telephone Nos.

அமைச்சர் / Minister: 2784822, 2784803, 2785637

செயலாளர் / Secretary: 2784811

அலுவலகம் / Office: 2785141-50, Fax: 2784846

மின்னஞ்சல் / E-mail : isurupaya@moe.gov.lk

உமது இல. / Your No. ..........................................

கல்வி அமைச்சு

Ministry of Education

"இசுருபாயா" ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை பத்தரமுல்ல

"Isurupaya", Sri Jayawardhanapura Kotte Battaramulla.

பாடசாலை செயற்பாடுகள், தனியார் பாடசாலைக் கிளை

எமது இல. / My No. ED/01/12/02/06/01

திகதி / Date 2009.06. 02

சுற்றுநிருப இல 2008/17 (ii)

மாகாண கல்விச் செயலாளர்கள்,
மாகாண கல்விப் பணிப்பாளர்கள்,
வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,
கோட்டப் பொறுப்பு பிரதி / உதவிக் கல்விப் பணிப்பாளர்கள்,
அரசாங்க பாடசாலைகள், அங்கீகரிக்கப்பட்ட தனியார் பாடசாலை அதிபர்கள்.

## க.பொ.த (உயர் தர) வகுப்புகளுக்கு மாணவர்களை அனுமதித்தல்

க.பொ.த (உயர் தர) வகுப்புகளுக்கு மாணவர்களை அனுமதித்தல் தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள 2008.04.30 ஆம் திகதியும் இலக்கம் 2008/17 இணையும் கொண்ட சுற்றுநிருபத்துக்கு 2008.12.31 ஆம் திகதியைக் கொண்ட இலக்கம் 2008/17(i) இன் மூலம் செய்யப்பட்ட திருத்தங்களுக்கு மேலதிகமாக இது வெளியிடப்படுகிறது.

02. இதற்கு முந்திய வருடங்களில் வர்த்தகப் பாடத்துறையில் கல்வி கற்பதற்கு விசேட தகைமையாக சமூகக்கல்விப் பாடத்தில் பெற்றுக் கொண்ட திறமைச் சித்தியையும் கவனத்திற் கொள்ளப்பட்டதாலும் புதிய பாடத்திட்டத்தின் கீழ் சமூகக்கல்விப் பாடம் இல்லாததன் காரணமாகவும் அனைத்து மாணவர்களும் தோற்றும் பாடங்களிடையே சமூகக்கல்விப் பாடத்திலிருந்து பிரிந்து வந்த வரலாறு பாடத்தில் பெற்றுக் கொண்ட திறமைச் சித்தியையும் விசேட தகைமையின் கீழ் கவனத்தில் கொள்ளும்படி சில அதிபர்களும் பெற்றோர்களும் மாணவர்களும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். இவ் வேண்டுகோள்கள் கருத்திற் கொள்ளப்பட்டு, மாணவர்களுக்கு அதிக சந்தர்ப்பத்தைப் பெற்றுக் கொடுக்கும் பொருட்டு 2009ஆம் ஆண்டில் 12ம் தரத்திற்கும் அதன் பின்பும் வர்த்தகப்பாடத்துறைக்கு அனுமதி பெறும் மாணவர்களுக்கு வரலாறு பாடத்தில் பெற்றுக் கொள்ளும் திறமைச் சித்தியையும் விசேட தகைமையின் கீழ் கவனத்திற் கொள்வதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

03. இதன்படி இலக்க 2008/17 சுற்று நிருபத்தின் 2.5 (ஆ) ii இன் முதலாம் பந்தி கீழ் வருமாறு திருத்தப்படுகிறது.

உரிய திறமைச் சித்திகள் மூன்றில் ஒன்று முயற்சியாண்மைக் கற்கைக்கு அல்லது வணிகமும் கணக்கீட்டுக்கும் அல்லது வரலாற்றுக்கு அல்லது சமூகக்கல்விக்குப் பெற்றிருத்தல் வேண்டும்.

மேற்குறிப்பிட்ட திருத்தங்களுக்கு ஏற்ப இலக்கம் 2008/17 சுற்றுநிருபத்தினை இதன் பின்பு செயற்படுத்த வேண்டியதோடு அச்சுற்று நிருபத்தின் ஏனைய விடயங்கள் அனைத்தும் அவ்வாறே அமுலில் இருக்கும் என்பதை கவனத்திற் கொள்ளலாம்.

எம்.எம்.என்.டி.பண்டார
செயலாளர்
கல்வி அமைச்சு

பிரதிகள் :

1. தேசிய கல்வி ஆணைக்குழுத் தலைவர்
2. தேசிய கல்வி நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம்
3. பரீட்சை ஆணையாளர் நாயகம்
4. கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்
5. கணக்காய்வாளர் நாயகம்
6. கல்வி அமைச்சின் சகல பதவிநிலை உத்தியோகத்தர்கள்.
7. கல்வி அமைச்சின் சகல பிரிவுத் தலைவர்களும்
8. அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைத் தலைவர்கள்

දුරකථන/தொலைபேசி இல./Telephone Nos.

අමාත්‍ය / அமைச்சர் / Minister } 2784832, 2784807, 2785617

ලේකම් / செயலாளர் / Secretary } 2784812

කාර්යාලය / அலுவலகம் / Office } 2785141-50, Fax: 2784846

ඊමේල්/ஈ-மெயில்: E-mail : isurupaya@moe.gov.lk

ඔබේ අංකය / உமது இல. / Your No. } ..........................................

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', ශ්‍රී ජයවර්ධනපුර
බත්තරමුල්ල
"இசுருபாயா" ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை
பத்தரமுல்ல
"Isurupaya", Sri Jayawardhanapura Kotte
Battaramulla.


பாடசாலை செயற்பாட்டு தனியார் பாடசாலைகள் கிளை

මගේ අංකය / எமது இல. / My No. } ED/01/12/10/06/01

දිනය / திகதி / Date } 2008.12.31

சுற்று நிருப இல 2008/ 17(i)

மாகாணக் கல்விச் செயலாளர்கள்
மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்
வலயக் கல்விப் பணிப்பாளர்கள்
கோட்டப் பொறுப்பு பிரதி / உதவிக் கல்விப் பணிப்பாளர்கள்
அரசாங்க/ அங்கீகரிக்கப்பட்ட பாடசாலை அதிபர்கள்

## க.பொ.த (உயர் தர) வகுப்புகளுக்கு மாணவர்களை அனுமதித்தல்

க.பொ.த(உயர் தர) வகுப்புகளுக்கு மாணவர்களை அனுமதித்தல் பற்றி இதற்கு முன் வெளியிடப்பட்டுள்ள 2008.04.30 ஆம் திகதியைக் கொண்ட இல: 2008 / 17 சுற்று நிருபத்துக்கு கீழ் வரும் திருத்தத்தினை மேற் கொள்கின்றேன்.

02. இல 2008/ 17 சுற்று நிருபத்தின் 2.1 ஆம் பிரிவு கீழ் வருமாறு திருத்தப் படுதல் வேண்டும்.

2.1. (அ) பழைய பாடத் திட்டத்திற்கு அமைவாக க.பொ.த(சா.த) பரீட்சையில் போதனா மொழியும் கணிதமும் உட்பட 06 கட்டாயப் பாடங்களில் சித்தியடைந்திருப்பதோடு அவற்றில் குறைந்த பட்சம் 03 பாடங்களில் திறமைச் சித்தி அல்லது அதை விட உயர்ந்த சித்தியைப் பெற்றிருத்தல் வேண்டும். மேற்கூறப்பட்ட தகைமைகளைப் பூரணப் படுத்துகையில் மேலதிக பாடங்களில் பெறப்படும் சித்தி அல்லது திறமைச் சித்திகளைப் பயன்படுத்த முடியாது.

(ஆ) 2007 யில் அறிமுகம் செய்யப்பட்ட புதிய பாடத்திட்டத்திற்கு அமைவாக க.பொ.த(சா.த) பரீட்சையில் போதனா மொழியும் கணிதமும் உட்பட ஏதாவது 06 பாடங்களில் சித்தியடைந்திருப்பதோடு அவற்றில் குறைந்த பட்சம் 03 பாடங்களில் திறமைச் சித்தி அல்லது அதை விட உயர்ந்த சித்தியைப் பெற்றிருத்தல் வேண்டும்.

(சுற்று நிருபத்தில் பொதுத் தகைமைகள் குறிப்பிடப்படும் அனைத்து இடங்களிலும் மேற் குறிப்பிடப்பட்டவாறு செயற்படுதல் வேண்டும்.)

03. சுற்று நிருபத்தின் 2.5(அ) 1 உப பிரிவு கீழ் வருமாறு திருத்தப்படுதல் வேண்டும்.

2.5

(அ) கலைப் பிரிவு

I. கலைப் பாடத்துறை

2.1 மற்றும் 2.2 உப பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள திறமைச் சித்திகள் மூன்றில் ஒன்றாவது க.பொ.த(உயர் தர) பரீட்சைக்கு தெரிவு செய்யும் பாடமொன்றுடன் தொடர்பு உடையதாய் இருத்தல் வேண்டும்.

சித்திரம் அல்லது சங்கீதம் அல்லது நடனம் அல்லது நாடகமும் அரங்கியலும் எனும் ஏதாவது ஒரு பாடத்தினை மேற் குறிப்பிட்ட பாடத்துறையின் கீழ் பயில உத்தேசித்துள்ள

மாணவரொருவர் க.பொ.த(சா.த) பரீட்சையில் அக் குறிப்பிட்ட பாடத்திற்கே திறமைச் சித்தியைப் பெற்றிருத்தல் வேண்டும். அழகியல் பாடங்கள் இரண்டினைப் பயிலுவதாயின் அதில் ஒரு பாடத்திற்கு க.பொ.த(சா.த) பரீட்சையில் திறமைச் சித்தியைப் பெற்றிருத்தல் வேண்டும். (பிரயோக செயற் பாடுகளைக் கொண்ட அழகியியல் பாடங்களை பயில்வதற்கு தேவையான திறமைச் சித்தியை மாத்திரம் மேலே குறிப்பிடப்பட்ட 2.3 உப பிரிவுக்கு ஏற்பவும் பெற்றுக் கொள்ள முடியும்.

மேற்குறிப்பிட்ட திருத்தங்களுக்கு ஏற்ப இலக்கம் 2008/17 சுற்றுநிருபத்தினை இதன் பின்பு செயற்படுத்த வேண்டியதோடு அச்சுற்று நிருபத்தின் ஏனைய விடயங்கள் அனைத்தும் அவ்வாறே அமுலில் இருக்கும் என்பதை கவனத்திற் கொள்ளவும்.

எம்.எம்.என்.டி.பண்டார
செயலாளர்
கல்வி அமைச்சு

**பிரதிகள் :**

1. தேசிய கல்வி ஆணைக்குழுத் தலைவர்
2. தேசிய கல்வி நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம்
3. பரீட்சை ஆணையாளர் நாயகம்
4. கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்
5. கணக்காய்வாளர் நாயகம்
6. கல்வி அமைச்சின் சகல பதவிநிலை உத்தியோகத்தர்கள்
7. கல்வி அமைச்சின் சகல பிரிவுத் தலைவர்களும்
8. அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைத் தலைவர்கள்

දුරකථන/தொலைபேசி இல./Telephone Nos.

අමාත්‍යතුමා / அமைச்சர் / Minister — 2784832, 2784807, 2785617

ලේකම් / செயலாளர் / Secretary — 2784812

කාර්යාලය / அலுவலகம் / Office — 2785141-50, Fax: 2784846

ඊමේල්/ஈ-மெயில்/E-mail : isurupaya@moe.gov.lk

ඔබේ අංකය / உமது இல. / Your No. ……………………………………

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
**Ministry of Education**

'ඉසුරුපාය', ශ්‍රී ජයවර්ධනපුර
බත්තරමුල්ල
"இசுருபாயா" ஸ்ரீ ஜயவர்தன்புர கோட்டை
பத்தரமுல்ல
"Isurupaya", Sri Jayawardhanapura Kotte
Battaramulla.

பாடசாலை செயற்பாட்டு தனியார் பாடசாலைகள் கிளை

My No. / මගේ අංකය / எமது இல. — ED/01/12/10/06/01

දිනය / திகதி / Date — 2008.04.30

## சுற்றுநிருப இல : 2008/17

சகல மாகாண கல்விச் செயலாளர்கள்,
சகல மாகாண கல்விப் பணிப்பாளர்கள்,
சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல கோட்டப் பொறுப்பு பிரதி / உதவிக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல அரசாங்க / அங்கீகரிக்கப்பட்ட தனியார் பாடசாலைகளின் அதிபர்கள்.

# க.பொ.த (உயர் தர) வகுப்புகளுக்கு மாணவர்களை அனுமதித்தல்

பாடசாலைகளுக்கு பிள்ளைகளை அனுமதித்தல் தொடர்பாக இதற்கு முன் வெளியிடப்பட்ட 2006.05.23ஆம் திகதியைக் கொண்ட இல. 2006/20 சுற்று நிருபத்தின் பகுதி I இன் 1.4 இன் அறிவுறுத்தல்களையும் பகுதி Vஇன் அனைத்து அறிவுறுத்தல்களையும் விஞ்சி இச்சுற்று நிருப அறிவுறுத்தல்கள் 2008.05.01ஆம் திகதி தொடக்கம் க.பொ.த(உ.த) வகுப்புகளுக்கு மாணவர்களை அனுமதித்தலில் தாக்கத்தினை ஏற்படுத்தும்.

2.0 **12ஆம் தரத்திற்கு அனுமதிப்பதற்கான பொதுத் தகைமைகள்**

2.1 க.பொ.த(சா.த) பரீட்சையில் போதனா மொழியும் கணிதமும் உட்பட 6 கட்டாயப் பாடங்களில் சித்தியடைந்திருப்பதோடு அவற்றில் குறைந்த பட்சம் 3 பாடங்களில் திறமைச் சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும். மேற்கூறப்பட்ட தகைமைகள் பூரணப்படுத்தப்படுகையில் மேலதிக பாடங்களில் பெறப்படும் சித்தி அல்லது திறமைச் சித்திகளைப் பயன்படுத்த முடியாது.

2.2 இத்தகைமை ஓர் அமர்விலோ அல்லது இரு அமர்வுகளிலோ பெற்றுக்கொள்ள முடியும்.

(அ) இரு அமர்வுகளில் இத் தகைமைகளைப் பெற்றுக்கொள்ளும் மாணவரொருவர் சமர்ப்பிக்கும் க.பொ.த(சா.த) பெறுபேற்றுச் சான்றிதழ் இரண்டில் முதல் பெறுபேற்றுச் சான்றிதழில் குறைந்த பட்சம் மூன்று திறமைச் சித்திகளுடன் போதனா மொழி அல்லது கணிதம் உட்பட 5 கட்டாயப் பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

(ஆ) க.பொ.த(சா.த) பரீட்சையில் குறைந்த பட்சம் மூன்று திறமைச் சித்திகளுடன் போதனா மொழி அல்லது கணிதம் உட்பட 5 கட்டாயப் பாடங்களில் சித்தி பெற்ற பெறுபேற்றுச் சான்றிதழ் ஒன்றினைச் சமர்ப்பிக்கும் மாணவரொருவருக்கு அதற்கடுத்து நடைபெறும் க.பொ.த(சா.த) பரீட்சையிலேயே குறித்த தகைமைகளைப் பூர்த்திசெய்து கொள்ளும் நிபந்தனையின் பேரில் தற்காலிகமாக க.பொ.த(உ.த) வகுப்புக்கு அனுமதி வழங்க முடியும். அவ்வாறு அனுமதிக்கப்பட்ட மாணவரொருவர் மேற்குறிப்பிடப்பட்ட தகைமையை அடுத்து நடைபெறும் க.பொ.த (சா.த) பரீட்சையிலேயே பெற்றுக்கொள்ளாவிடின் பாடசாலையிலிருந்து விலக்கப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும் பெறுபேற்றினை மீள்பரிசீலனைக்கு அனுப்பியிருப்பின் அம்மீள் பரிசீலனை பெறுபேறு வரும் வரை மாத்திரம் பாடசாலையில் தங்கி இருக்க முடியும்.

2.3 மேற்கூறப்பட்ட 2.1 உபபிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவையான பொதுத் தகைமைகளின் கீழ் தேவையான திறமைச் சித்திகள் மூன்றில் ஒன்று இல்லாத பட்சத்தில் மாத்திரம் க.பொ.த(சா.த) எழுத்துப் பரீட்சையில் சாதாரண சித்தியொன்றினைப் பெற்று அப்பாடத்திலேயே பாடசாலை மட்ட கணிப்பீட்டு வேலைத்திட்டத்தின் கீழ் திறமை அல்லது அதற்கு மேற்பட்ட தேர்ச்சி மட்டத்தினைப் பெற்றிருப்பின் அதனை ஓர் திறமைச் சித்தியாகக் கருத முடியும் எனினும் இது போதனா மொழி, கணிதம் எனும் பாடங்களுக்கும் பொருந்தாது.

2.4 பாடசாலை மாணவராக முதலமர்வின் பின், க.பொ.த(சா.த) பரீட்சைக்குத் தோற்றி பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்ளும் மாணவரொருவருக்கும் மேற்குறிப்பிடப்பட்ட 2.3 உபபிரிவின் படி திறமைச் சித்தியொன்றை பூர்த்திசெய்து கொள்ள முடியும். அதற்காக முதல் அமர்வில் பெற்றுக் கொள்ளும் பாடசாலை மட்டக் கணிப்பீட்டுப் பெறுபேற்றினைப் பயன்படுத்திக்கொள்ள முடியும்.

2.5 **12ஆம் தரத்தின் பாடத் துறைகளுக்கு அனுமதிபெறத் தேவையான விஷேட தகைமைகள் :**

மேற்குறித்த பொதுத் தகைமைகளுக்கு மேலதிகமாக அந்தந்தப் பாடத்துறைகளுக்கு அனுமதியைப் பெறும் பொருட்டுக் கீழ்க் காணும் உப பிரிவுகளில் காட்டப்பட்டுள்ள விசேட தகைமைகளையும் ஒரே பரீட்சையில் பெற்றிருத்தல் வேண்டும்.

**(அ) கலைப் பிரிவு**

**i. கலைப் பாடத்துறை**

2.1, 2.2 உப பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள திறமைச் சித்திகள் மூன்றில் குறைந்தது ஒன்றாவது க.பொ.த(உ.த) பரீட்சைக்காகத் தெரிவுசெய்யும் பாடமொன்றுடன் தொடர்புடையதாய் இருத்தல் வேண்டும்.

சித்திரம் அல்லது சங்கீதம் அல்லது நடனம் அல்லது நாடகமும் அரங்கியலும் எனும் ஏதாவது ஒரு பாடத்தினை மேற்குறிப்பிட்ட பாடத்துறையின் கீழ் பின்பற்ற உத்தேசித்துள்ள மாணவரொருவர் க.பொ.த(சா.த) பரீட்சையில் அக் குறித்த பாடத்திலேயே திறமைச் சித்தியை பெற்றிருத்தல் வேண்டும். (பிரயோகச் செயற்பாடுகளைக் கொண்ட மேற்குறிப்பிடப்பட்ட அழகியல் பாடங்களை பின்பற்றுவதற்கு தேவையான திறமைச் சித்தியை மாத்திரம் மேற்குறிப்பிடப்பட்டுள்ள 2.3 உப பிரிவுக்கு ஏற்பவும் பெற்றுக்கொள்ள முடியும்)

**ii. வர்த்தகப் பாடத்துறை**

உரிய திறமைச் சித்திகள் மூன்றில் ஒன்றினை முயற்சியாண்மைக் கற்கையில் அல்லது வணிகமும் கணக்கீட்டில் அல்லது கணிதத்தில் பெற்றிருத்தல் வேண்டும்.

குறிப்பு: சிங்களம் / தமிழ் / ஆங்கிலம் எனும் பாடமொன்றினை பின்பற்றுவதாயின் க.பொ.த(சா.த) பரீட்சையில் சிங்கள மொழியும் இலக்கியமும் / தமிழ் மொழியும் இலக்கியமும் / ஆங்கிலம் எனும் பாடங்களில் உரிய பாடத்தில் திறமைச் சித்தியைப் பெற்றிருத்தல் வேண்டும். அவ்வாறே ஏதாவது சமயமொன்றினை அல்லது ஏதாவது சமயம் சார்ந்த நாகரிகமொன்றினைப் பாடமாக, மேற்குறிப்பிட்ட கலைப் பிரிவின் கீழ் பின்பற்றுவதற்கு உத்தேசித்துள்ள மாணவரொருவர் க.பொ.த.(சா.த) பரீட்சையில் அவ் உரிய சமயப் பாடத்தில் திறமைச் சித்தியொன்றைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**ஆ. விஞ்ஞானப் பிரிவு**

**i. பௌதீக விஞ்ஞானப் பாடத்துறை:**
இப்பாடத் துறையைப் பின்பற்றுவதாயின் கணித பாடத்தில் திறமைச் சித்தியைப் பெற்றிருக்க வேண்டியதோடு விஞ்ஞானப் பாடத்தில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**ii. உயிரியல் விஞ்ஞானப் பாடத்துறை:**
இப்பாடத்துறையைப் பின்பற்றுவதாயின் விஞ்ஞானப் பாடத்தில் திறமைச் சித்தியைப் பெற்றிருக்க வேண்டியதோடு கணிதப் பாடத்தில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

2.6 மேலே காட்டப்பட்ட தகைமைகள் க.பொ.த(உ.த) வகுப்புகளில் அனுமதிபெற மட்டுமே பொருந்தும் என்பதைப் பாடசாலை அதிபர்கள் கவனத்திற் கொள்ள வேண்டும். உயர்தர வகுப்புப் பாடத்துறைகளுக்கான பாடங்களைத் தெரிவு செய்தல் தொடர்பாக இவ்வமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள பல்கலைக்கழக பிரவேஷம் தொடர்பான க.பொ.த(உ.த) பாடச் சேர்மானங்கள் எனும் சுற்றுநிருபத்திற்கேற்ப தம் மாணவர்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்குவது அதிபர்களின் பொறுப்பாகும்.

3.0 12 ஆந்தரத்திற்கு அனுமதி பெற்றதன் பின், தான் தேர்ந்தெடுத்த பாடத்துறையை மாற்ற விண்ணப்பிக்கும் ஒரு மாணவனுக்கு உயர்தர வகுப்புக்கு அனுமதி பெற்ற வருடத்தில் மாத்திரம் தேவையான தகைமைகளும் வகுப்புகளில் வெற்றிடமும் இருப்பின் அவ்வாறு மாற்றிக் கொள்வதற்கு இடமளிக்க முடியும். மாணவரொருவருக்கு க.பொ.த(உ.த) வகுப்புகளில் தங்கியிருந்து படிக்கும் உச்சக் கால எல்லை, மூன்று வருடங்கள் மாத்திரமே என்ற நிபந்தனையின் பேரிலேயே இவ்வாறு இடமளிக்கப்படல் வேண்டும். அடுத்து வரும் க.பொ.த(சா.த) பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் அல்லது 13ம் தரத்தில் பாடத் துறையை மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

4.0 **12ஆம் தரத்தில் மாணவர்களை அனுமதிக்கையில் முன்னுரிமை:**

4.1 க.பொ.த(உ.த) (12 ஆம் தரம்) வகுப்புகளுக்கு மாணவர்களை அனுமதிப்பதற்குத் தெரிவு செய்கையில் முன்னுரிமை கீழ்க் காணும் விதத்தில் அமைதல் வேண்டும்.

(அ) அப்பாடசாலையின் விண்ணப்பதாரிகளாக பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் (சுற்றுநிருபத்தின் 2.0 ஆம் பிரிவின் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு பாடத்துறைகளுக்கும் இருக்க வேண்டிய மிகக் குறைந்த தகைமைகளைப் பெற்று, அவர்கள் அப்பாடத்துறைக்கு விண்ணப்பிக்கும் பட்சத்தில் அதனைக் கட்டாயம் பெற்றுக் கொடுத்தல் வேண்டும்.)

(ஆ) க.பொ.த.(உ.த) வகுப்பு இல்லாத அரசாங்கப் பாடசாலைகளின் அல்லது உரிய பாடத்துறை இல்லாத அரசாங்கப் பாடசாலைகளின் மாணவர்கள். (தேசிய பாடசாலைகளுக்கு மாணவர்களை அனுமதிக்கையில் அப் பாடசாலை அமைந்த வலயத்தினுள் உயர்தர வகுப்பு இல்லாத அல்லது உரிய பாடத்துறை / மாணவர் விண்ணப்பிக்கும் பாடச் சேர்மானம் இல்லாத தேசிய பாடசாலைகளல்லாத பாடசாலைகளிலிருந்து விண்ணப்பிக்கும் மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்குதல் வேண்டும்.)

(இ) ஏற்றுக் கொள்ளக் கூடிய காரணங்களை முன்வைக்கும் பாடத்துறை உள்ள அரசாங்கப் பாடசாலைகளின் மாணவர்கள்.

(ஈ) க.பொ.த.(சா.த) பரீட்சைக்கு சமாந்தர தகைமையுடைய பெறுபேறுகள் பெற்றுள்ள (எமது பாடச் சேர்மானங்களுக்குப் பொருந்தக் கூடிய வகையில்) வெளிநாட்டில் இருந்து விட்டு வரும் மாணவர்கள் (சான்றிதழ்களில் சமாந்தரத் தன்மை விளக்கமாக இல்லாத விடத்து அமைச்சுச் செயலாளரின் அறிவுறுத்தலுக்கமையக் கருமமாற்றுதல் வேண்டும்.)

(உ) க.பொ.த(உ.த) வகுப்புகள் அற்ற அல்லது உரிய பாடத்துறைகள் அற்ற தேசிய பாடவிதானத்திற்கு ஏற்ப கற்பிக்கும் தனியார் பாடசாலைகளின் மாணவர்கள் (உரிய வலயக் கல்விப் பணிப்பாளர் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.)

4.2 மேற் குறிப்பிட்ட முன்னுரிமை அட்டவணையில் முதலில் உள்ள விடயங்களுக்கு ஏற்ப விண்ணப்பித்த மாணவர்கள் இல்லாதவிடத்து மாத்திரமே அடுத்த விடயம் தொடர்பாக கருத்தில் கொள்ளப்படுதல் வேண்டும். (உ+ம் மேலே 4.1 (அ) வில் குறிப்பிடப்பட்ட மாணவர்கள் அனுமதிக்கப்பட்டதன் பின் வெற்றிடங்கள் காணப்படின் மாத்திரமே (ஆ) ஐ கருத்திற் கொள்ளுதல் வேண்டும்.)

4.3 க.பொ.த(உ.த) வகுப்புகளுக்கு அனுமதிபெறத் தகைமை பெற்று 12ஆம் தரத்திற்கு அனுமதி பெற உத்தேசித்துள்ள மாணவர்கள் அடுத்த வருடத்தின் ஜனவரி 31ம் திகதியன்று 19 வயதினை தாண்டாதிருத்தல் வேண்டும் இந்நிபந்தனை 4.1 (அ) உப பிரிவில் குறிப்பிடப்படும். மாணவர்களுக்கு பொருந்தாது.

4.4 மாணவர்கள் அனுமதி பெற்ற வருடத்திற்கு அடுத்த வருடத்தின் ஜனவரி 31ம் திகதியன்று 19 வயதுக்கு மேற்பட்ட மாணவர்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்களுடன் அனுமதி பெறுவதற்கான ஏனைய தகைமைகளை பூரணப்படுத்தி உள்ளார் என்ற அதிபரின் சிபாரிசையும் கொண்ட வேண்டுகோள்கள் பற்றி மாகாணப்பாடசாலைகளாயின் மாகாணக் கல்விப் பணிப்பாளரும் தேசிய பாடசாலையாயின் இவ்வமைச்சின் செயலாளரும் தீர்மானிப்பர்.

4.5 மேற்குறிப்பிட்ட 4.1 உபபிரிவின் (ஆ) தொடக்கம் (உ) வரையான மாணவர்கள் தமது விண்ணப்பப்படிவத்தினை இச்சுற்று நிருபத்தின் பின்னிணைப்பு இல 01ற்கு ஏற்ப தயார் செய்து உரிய பாடசாலையின் அதிபருக்கு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பிக்கையில் தாம் விரும்பும் பாடசாலைகள் நான்கினை முன்னுரிமைக் கேற்ப குறிப்பிடுவதோடு அப்பாடசாலைகளுக்கும் வெவ்வேறாக விண்ணப்பப்படிவங்களை அனுப்புதல் வேண்டும்.

குறிப்பு:- க.பொ.த(சா.த) பெறுபேற்றிற்கு ஏற்ப வேறு பாடசாலையொன்றில் அனுமதி பெற விண்ணப்பிப்பதற்கு மாணவர்களுக்கு அவசியமெனின் அதற்காக அதிபர்கள் இடமளிக்க வேண்டியதோடு விண்ணப்பிக்கும் தமது பாடசாலை மாணவர்களின் விண்ணப்பப்படிவங்களில் தகுந்த சிபாரிசுகளை (தமது பாடசாலையில் உயர்தர பாடத்துறை, வேறு வசதிகள் உள்ளனவா என்பன போன்றன) வழங்கி கட்டாயமாக உறுதிப்படுத்துதல் வேண்டும்.

4.6 க.பொ.த.(உ.த) வகுப்பு அனுமதிக்காகச் சமர்ப்பிக்கப்படும் சகல விண்ணப்பங்களும் மேலே 4.1 உபபிரிவின் (ஆ) தொடக்கம் (உ) வரையான உபபிரிவுகளுக்கு ஏற்ப வெவ்வேறாக அட்டவணைப்படுத்தப்பட்டு பின்னிணைப்பு இலக்கம் 02 இல் குறிப்பிடப்பட்டுள்ள புள்ளிவழங்கல் திட்டத்திற்கு அமையத் தெரிவு செய்யப்படல் வேண்டும். புள்ளி வழங்கும் முறை க.பொ.த. (சா.த) பெறுபேறுகளையும் இணைப்பாடவிதான செயற்பாடுகளையும் அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. இவ்வறிவுறுத்தலுக்குகேற்ப செயற்படுவது பற்றிய முழுப் பொறுப்பும் பாடசாலை அதிபரையே சாரும்.

4.7 க.பொ.த(உ.த) 12ம் தரத்திற்கு மாணவர்களை தெரிவு செய்கையில் தமது பாடசாலையின் மாணவர்களுக்கோ, ஏனைய பாடசாலையின் மாணவர்களுக்கோ பாடசாலையால் எவ்வித பரீட்சையும் நடத்தப் படுதல் கூடாது.

**5.0 தகைமை பெற்ற மாணவர்களுக்கு பாடசாலைகளைப் பெற்றுக் கொடுத்தல்**

5.1 க.பொ.த.(உ.த) உரிய பாடத்துறை இல்லாத பாடசாலைகளிலிருந்து தகைமை பெற்ற சகல மாணவர்களுக்கும் க.பொ.த.(உ.த) வகுப்பு உள்ள பாடசாலைகளில் அனுமதி பெற்றுக் கொடுத்தல் வலயக் கல்விப் பணிப்பாளர் / மாகாணக் கல்விப் பணிப்பாளரின் பொறுப்பாகும்.

5.2 ஏதாவதொரு பாடசாலையொன்றில் உயர்தர வகுப்புகளில் உரிய பாடத்துறையை கற்பிப்பதற்கு தேவையான ஆசிரியர்களும் பௌதீக வசதிகளும் வழங்கப்பட்டிராத சந்தர்ப்பங்களில் உரிய பாடத்துறைக்கு தகைமைபெற்ற அப்பாடசாலையின் மாணவர்கள் உரிய வசதிகளை கொண்ட வேறு பாடசாலையொன்றுக்கு / பாடசாலைகளுக்கு அனுமதிப்பதற்காக வலயக் கல்விப் பணிப்பாளர்/மாகாணக் கல்விப் பணிப்பாளர் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

5.3 யாதாவதொரு பாடசாலையில் க.பொ.த.(சா.த) பரீட்சையில் சில பாடங்களை ஆங்கில மொழிமூலத்தில் தோற்றி சித்தியடைந்த மாணவர்கள் க.பொ.த(உ.த) வகுப்பில் அப்பாடங்களுடன் தொடர்பான ஒன்று அல்லது சில பாடங்களை ஆங்கில மொழி மூலம் கற்பதற்காக விண்ணப்பித்திருப்பின் அப்பாடசாலையிலேயே அப்பாடம்/ பாடங்கள் ஆங்கில மொழி மூலம் கற்பிப்பதற்கான வசதி இருப்பின் இடமளித்தல் வேண்டும். அவ்வாறு இல்லாவிடின் அதிபர், வலயக் கல்விப் பணிப்பாளரிடம் அவர்களை அனுப்புதல் வேண்டும். வலயக் கல்விப் பணிப்பாளர் மாகாணக் கல்விப் பணிப்பாளருடன் கலந்துரையாடி குறித்த மாணவர்களுக்காக வலயத்தினுள் / மாகாணத்தினுள் உரிய வசதி கொண்ட பாடசாலையொன்றைப் பெற்றுக் கொடுத்தல் வேண்டும்.

குறிப்பு:- க.பொ.த. (உ.த) வகுப்பொன்றில் அனுமதிக்கக் கூடிய ஆகக் கூடிய மாணவர் எண்ணிக்கை 40 ஆகும்.

**6.0 க.பொ.த.(உ.த) வகுப்புகளில் கற்பதற்காக வசதியான மாவட்டங்களிலிருந்து பின்தங்கிய மாவட்டப் பாடசாலைகளுக்குச் செல்லல்.**

6.1 பல்கலைக்கழக பிரவேசத்தின் போது பெயர் குறிப்பிடப்பட்டுள்ள பின்தங்கிய மாவட்டங்களுக்கு பெற்றுக் கொடுக்கப்படும் சலுகையை வஞ்சகமாகப் பெற்றுக் கொள்ளும் நோக்குடன் வசதியான மாவட்டங்களில் இருந்து க.பொ.த(சா.த) சித்திபெற்று பின்தங்கிய மாவட்டங்களிலுள்ள உயர்தர வகுப்புக்களை கொண்ட பாடசாலைகளுக்கு அனுமதி பெற முயற்சிக்கும் மாணவர்களுக்கு இடமளித்தல் கூடாது.

6.2 எனினும் கீழ்வரும் விஷேட காரணங்களின் கீழ் அவ்வாறான வேண்டுகோள்கள் விடுக்கப்படின் உரிய காரணத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டு அக் காரணம் நிரூபிக்கப்பட்டால் மாத்திரமே அனுமதியை கருத்திற் கொள்ள முடியும். இது பற்றி உண்மையாகவே உரிய பிரதேசத்தில் தமது குடும்ப உறுப்பினர்கள் சகிதம் வசிப்பதனை அதிபர் வசிப்பிடத்திற்குச் சென்று பரீட்சித்து உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

அ. **அரச தேவையின் பொருட்டு பெற்றோரின் இடமாற்றத்தின் காரணமாக :**

இடமாற்றத்தின் பின் தமது குடும்ப உறுப்பினர்கள் சகிதம் புதிய சேவை நிலையத்திற்கு அருகாமையிலுள்ள ஒரு பிரதேசத்திற்கு உண்மையாகவே தமது வதிவிடத்தினை மாற்றியிருந்தால், மாத்திரமே இக் காரணத்தின் கீழ் அனுமதியைப் பெற்றுக் கொடுக்க முடியும் இவ்வாறு வதிவிடத்தினை மாற்றியிருப்பது பற்றி உரிய நிறுவனத் தலைவரிடமிருந்தும் , உரிய பிரதேசத்தின் கிராம சேவை அலுவலர் ஊடாக பிரதேசச் செயலாளரிடமிருந்தும் அத்தாட்சிப் படுத்திய ஆவணங்களை பெற்றோர்கள் சமர்ப்பித்தல் வேண்டும்.

ஆ **பாதுகாப்புக் காரணங்களுக்காக**

இக் காரணத்திற்காக பெற்றோர் தமது வதிவிடத்தினை மாற்றியிருப்பின் பாதுகாப்புக் காரணங்களுக்காக தமது வதிவிடத்தினை மாற்றியிருப்பதாக உரிய பிரதேசத்தின் பொலிஸ் நிலையப் பொறுப்பாளரிடமிருந்து பெற்றுக் கொண்ட சான்றிதழ் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

7.0 **க.பொ.த(உ.த) வகுப்புகளில் கற்கக் கூடிய கால எல்லை:**

7.1 க.பொ.த.(உ.த) பாடநெறி 12 ஆந் தரம் 13 ஆந் தரம் என இரு வருட கால எல்லையைக் கொண்டிருக்கும்.

7.2 13 ஆம் வகுப்பில் சகல மாணவர்களும் அவ்வருட முடிவில் நிர்ணயிக்கப்பட்டுள்ள அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்திருப்பின் க.பொ.த.(உ.த) பரீட்சைக்கு தோற்ற வழிவகை செய்தல் வேண்டும்.

7.3 மாணவரொருவருக்கு மீண்டுமொருமுறை க.பொ.த(உ.த) பரீட்சைக்கு தோற்றுவதற்கு அவசியமெனில் 13 ஆம் வகுப்பில் அப்பாட நெறியை மீண்டும் ஒரு முறை மட்டும் கற்பதற்கு அனுமதியளிக்க முடியும். எனினும் க.பொ.த.(உ.த) வகுப்புகளில் தங்கியிருப்பதற்கு ஒரு மாணவனுக்கு கொடுக்கப்படும் உச்சக் கால எல்லை மூன்று வருடங்கள் என்பதைக் கருத்திற் கொள்ளுதல் வேண்டும்.

8.0 2005 ஆம் ஆண்டு தொடக்கம் உயர் தரப் பரீட்சைக்கு தோற்றும் பாடசாலை விண்ணப்பதாரிகளுக்காக பாடசாலை மட்டக் கணிப்பீட்டுச் செயற்பாடு கட்டாயப் படுத்தப்பட்டுள்ளது. உயர் தரப் பரீட்சைக்குத் தோற்றும் வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கும் இதற்கு சமாந்தரமான பதில் மதிப்பீட்டு நடவடிக்கையொன்று நடைமுறையிலிருக்கின்றது. அதற்காக பரீட்சைக்கு தோற்றும் வருடத்துக்கு முதல் வருடத்தில் செய்திப் பத்திரிகை அறிவித்தல் மூலம் அறியத் தரப்படும் திகதிக்கு முன் உரிய மாகாணக் கல்வித் திணைக்களங்களில் பதிவு செய்து கொள்ளல் வேண்டும். இது தொடர்பாக ஒவ்வொரு வருடமும் செய்திப் பத்திரிக்கைகள் மூலம் வெளிவாரி விண்ணப்பதாரிகள் அறிவுறுத்தப்படுவர். இப்பதில் செயற்பாடு தொடர்பாக கல்வியமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள சுற்று நிருப அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்.

9.0 **பொது விடயங்கள்**

9.1 க.பொ.த்(உ.த) வகுப்பொன்றில் அனுமதி பெற்ற மாணவரொருவர் ஏற்றுக் கொள்ளக் கூடிய நியாயமான காரணங்களை முன் வைத்தால் மாத்திரமே ஒரு பாடசாலையிலிருந்து இன்னொரு பாடசாலைக்கு அனுமதி பெறுவதற்கு அங்கீகாரம் பெற்றுக் கொள்ள முடியும். எனினும் ஒரு மாவட்டத்திலிருந்து இன்னொரு மாவட்டப் பாடசாலையொன்றில் அனுமதி பெறுவதற்கு எதிர்பார்ப்போராயின் உண்மையாகவே வதிவிடத்தினை மாற்றியவர்களா? என்பதனையும் 6.0 ஆவது பிரிவில் கூறப்பட்டுள்ள விடயங்களை மீறாதவர்களா? என்பதனையும் பரீட்சித்து அங்கீகாரத்தைப் பெற்றுக் கொடுத்தல் வேண்டும் இங்கு அனுமதி பெறுவதற்கு உத்தேசித்துள்ள பாடசாலை அதிபரின் சிபாரிசிக்கு ஏற்ப தேசிய பாடசாலையாயின் தேசிய பாடசாலைக் கல்விப் பணிப்பாளரினதும் மாகாணப் பாடசாலையாயின் மாகாணக் கல்விப் பணிப்பாளரினதும் அங்கீகாரத்தினை பொற்றோர் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

9.2. பயங்கரவாத நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்த குடும்பங்களின் பிள்ளைகளைப் பாடசாலையில் அனுமதிக்கும் போது பிறப்புச் சான்றிதழ், பாடசாலை விடுகைப் பத்திரம் என்பன இல்லாத விடத்து அக்குடும்பம் பயங்கரவாத நடவடிக்கைக்குட்பட்டதென்பதை உறுதிப்படுத்தும் கிராம உத்தியோகத்தரின் சான்றிதழ், அகதி முகாம் சான்றிதழ் என்பவற்றைக் கவனத்திற்கொண்டு தகைமைக்கேற்ப உரிய வகுப்பில் அனுமதிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். பிறப்புச் சான்றிதழ் சமர்ப்பிக்க முடியாத சந்தர்ப்பங்களில் பிறந்த திகதியை உறுதிப்படுத்துவதற்காக சத்தியக் கடதாசியொன்றினைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

9.3 அரசாங்கம் பொறுப்பேற்ற பாடசாலைகளின் வெற்றிடங்களை நிரப்பும் போது பொறுப்பேற்றபோது குறித்த பாடசாலையில் இருந்த மாணவர் சமய விகிதாசாரம் குறித்துக் கவனம் எடுத்தல் வேண்டும். ஒரு சமயத்தினருக்கு ஒதுக்கப்பட்ட அளவை விடக் குறைந்த விண்ணப்பதாரிகள் உள்ள பட்சத்தில் அவ்வெற்றிடங்கள் ஏனைய சமயப் பிரிவுகளுக்கிடையில் விகிதாசாரத்திற்கமையப் பகிர்ந்து கொள்ளல் வேண்டும்.

10.0 க.பொ.த(உ.த) வகுப்புகளுக்கு அனுமதி வழங்க ஒவ்வொரு வருடமும் மே மாதம் 20 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பங்கள் கோரப்பட வேண்டியதோடு மாணவர்களை அனுமதிக்கும் செயற்பாடுகள் ஜுன் மாதம் 15 ஆம் திகதியாகும் போது முடிக்கப்படுதல் வேண்டும்.

11.0 **பிள்ளைகளை அனுமதிப்பதற்காகப் பணமும் வேறு உதவிகளும் பெற்றுக் கொள்வதைத் தடை செய்தல் :**

சகல அரசினர் பாடசாலைகளுக்கும் கட்டணம் அறவிடாத தனியார் பாடசாலைகளுக்கும் மாணவர்களை அனுமதிக்கும் போது வசதிகள், சேவைகள் கட்டணமும் பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர் கட்டணமும் தவிர்ந்த வேறு கட்டணங்களோ உதவி நிதிகளோ வேறு பொருட்களோ அறவிடுதல் / பெற்றுக் கொள்ளுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. மாணவர்களை அனுமதித்ததன் பின்னரும் அவ்வாறான வற்புறுத்தல்கள் செய்தல் கூடாது. இவ்வாறான வற்புறுத்தல்கள் முழுமையான சட்ட விரோதச் செயலாவதோடு அது தொடர்பாகக் கடுமையான நடவடிக்கையும் எடுக்க வேண்டியேற்படும். பாடசாலை அதிபர்களோ அல்லது பாடசாலையுடன் தொடர்புடைய வேறு எந்த அமைப்புகளோ அவ்வாறான வற்புறுத்தல்களைச் செய்தல் கூடாது. இங்கு அமைப்புகள் எனப்படுவது பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம் உட்பட பாடசாலையோடு தொடர்புடைய சகல அமைப்புகளும் ஆகும்.

இச்சுற்றுநிருபம் தொடர்பாக எழும் முரண்பாடுகள் சம்பந்தமாக எடுக்கப்படும் இறுதி முடிவு கல்வி அமைச்சின் செயலாளரின் முடிவாகும்.

இச்சுற்றுநிருபத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்குமிடையே ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

எம்.எம்.என்.டி.பண்டார
செயலாளர்
கல்வி அமைச்சு.

பிரதிகள் :

1. தேசிய கல்வி ஆணைக்குழுத் தலைவர்
2. தேசிய கல்வி நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம்
3. பரீட்சை ஆணையாளர் நாயகம்
4. கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்
5. கணக்காய்வாளர் நாயகம்
6. கல்வி அமைச்சின் சகல பதவிநிலை உத்தியோகத்தர்கள்
7. கல்வி அமைச்சின் சகல பிரிவுத் தலைவர்களும்
8. அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளின் அதிபர்கள்

20..... ஆம் வருடத்தில் ........................................................................................ பாடசாலையில்
க.பொ.த.(உயர் தர) வகுப்புக்கு அனுமதிபெறுவதற்கான விண்ணப்பப்படிவம்.

01. மாணவரின் முழுப்பெயர் :- ........................................................................................

முதலெழுத்துக்களுடன் பெயர் :-........................................................................................

02. நிரந்தர முகவரி :........................................................................................

03. பால் (ஆண் / பெண்) :- ........................................................................................

04. போதனா மொழி :- ........................................................................................

05. தாய் / தந்தை / பாதுகாவலரின் முகவரி :- ........................................................................................

06. பிறந்த திகதி :- ........................................................................................

07. 20..... ஜனவரி 31 ஆம் திகதிக்கு வயது :- ....................வருடம் .................... மாதம் .................... நாள்

08. க.பொ.த(சா.த) கற்ற பாடசாலையின் முகவரியும் சேர்வு இலக்கமும் :- ................................................

09. அப்பாடசாலை அமைந்துள்ள மாவட்டம் :- ........................................................................................

10. இணைப்பாடவிதான வெற்றிகள் :- ........................................................................................

11. க.பொ.த(சா.த) பரீட்சைப் பெறுபேறுகள்

முதலாம் சான்றிதழ்
வருடம் :-
பரீட்சை எண் :-

இரண்டாம் சான்றிதழ்
வருடம் :-
பரீட்சை எண்:-

| பாடம் | சித்தி (குறியீடு) | பாடசாலை மட்ட கணிப்பீட்டு தேர்ச்சி மட்டம் (குறியீடு) | சித்தி (குறியீடு) |
|---|---|---|---|
| 1. சிங்கள மொழியும் இலக்கியமும்/ தமிழ் மொழியும் இலக்கியமும் | ............. | ............. | ............. |
| 2. ஆங்கிலம் | ............. | ............. | ............. |
| 3. கணிதம் | ............. | ............. | ............. |
| 4. விஞ்ஞானம் | ............. | ............. | ............. |
| 5. ...................... | ............. | ............. | ............. |
| 6. ...................... | ............. | ............. | ............. |
| 7. ...................... | ............. | ............. | ............. |
| 8. ...................... | ............. | ............. | ............. |
| 9 ...................... | ............. | ............. | ............. |
| 10 ...................... | ............. | ............. | ............. |

சித்தி குறியீடுகள் :- A - விஷேட சித்தி, B - அதி திறமைச் சித்தி, C - திறமைச் சித்தி, S - சாதாரண சித்தி, W – பலவீனம்

பாடசாலை மட்ட கணிப்பீட்டு தேர்ச்சி மட்டக் குறிப்பீடுகள் } 1 விஷேட தேர்ச்சி 2 உயர் தோச்சி 3 திறமைத் தேர்ச்சி 4. அண்மித்த தேர்ச்சி 5 தேர்ச்சிக்கு அண்மிக்காத

12. I. அனுமதி பெற உத்தேசிக்கும் பாடத்துறை :- கலை / வர்த்தகம் / உயிரியல் விஞ்ஞானம் / பௌதீக விஞ்ஞானம்(கணிதம்)

II. க.பொ.த(உ.த) கற்க விரும்பும் பாடங்கள்

| பாடம் | ஊடகம் (மொழி மூலம்) |
|---|---|
| 1. .......................... | .................................... |
| 2. .......................... | .................................... |
| 3. .......................... | .................................... |
| 4. .......................... | .................................... |

## க.பொ.த.(உயர் தர) வகுப்புக்களுக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான புள்ளி வழங்கும் முறை

(இங்கு சுற்று நிருபத்தின் 4.1 உபபிரிவின் முன்னுரிமைக்கேற்ப மாணவர்களை வேறுபடுத்தி புள்ளிகள் பெற்றுக் கொடுத்தல் வேண்டும் )

**1.0 அண்மைத் தூரம்**

விண்ணப்பதாரியின் வதிவிடப் பிரதேசத்துக்கமைய புள்ளிகள் வழங்கப்படுகின்றது.

கோட்டத்திற்குள் - 10 புள்ளிகள்
வலயத்துக்குள் - 07 புள்ளிகள்
மாவட்டத்துக்குள் - 05 புள்ளிகள்
மாகாணத்துக்குள் - 03 புள்ளிகள்
மாகாணத்துக்கு வெளியே - 01 புள்ளி

(உச்ச புள்ளிகள் 10)

(புள்ளி வழங்கப்படும் போது மேற்கூறியவற்றுள் ஒரு வகைக்கு மாத்திரம் புள்ளி வழங்குதல் வேண்டும்.)

**2.0 கல்விப் பொதுத் தராதர பத்திர சாதாரண தரப் பரீட்சையில் பெற்ற பெறுபேறுகள்**

ஒரு விஷேட சித்திக்கு (A) - 06 புள்ளிகள்
ஒரு அதி திறமைச் சித்திக்கு (B) - 05 புள்ளிகள்
ஒரு திறமைச் சித்திக்கு (C) - 04 புள்ளிகள்
ஒரு சாதாரண சித்திக்கு (S) - 02 புள்ளிகள்

மேலதிக பாடங்களுக்காக ஒரு பாடத்துக்கு ஒரு புள்ளி வீதம் இரண்டு பாடங்களுக்கு மாத்திரம் புள்ளி வழங்க முடியும்.

(உச்ச புள்ளிகள் 50)

( 2008 க.பொ.த (சா.த) (புதிய சீர்திருத்தத்திற்கேற்ப) பரீட்சைக்கு 09 பாடங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதால் அப்பெறுபேறுகளுக்காக மேற்குறிப்பிட்டபடி பாடங்கள் 09 யிற்கும் புள்ளிகள் பெற்றுக் கொடுக்கப்பட்டு உச்ச புள்ளிகள் 54 ஆக மாற்றிக் கொள்ளுதல் வேண்டும்.)

**3.0 இணைப்பாட விதான செயற்பாடுகள்**

இதன் கீழ் ஒரு மாணவனுக்கு கல்வியமைச்சினால் ஒழுங்கு செய்யப்பட்ட/அனுமதிக்கப்பட்ட 03 இணைப்பாடவிதான செயற்பாடுகளுக்கு மாத்திரமே புள்ளிகள் பெற்றுக் கொடுக்க முடியும். தேசிய மட்டம் அல்லது மாகாண மட்டம் என்பவற்றில் ஏதாவது ஒன்றுக்கு மாத்திரமே புள்ளி வழங்க முடியும்.

| பெற்ற இடங்கள் | 1 ஆம் இடம் | 2 ஆம் இடம் | 3 ஆம் இடம் |
|---|---|---|---|
| தேசிய மட்டம் | 5 புள்ளிகள் | 4 புள்ளிகள் | 3 புள்ளிகள் |
| மாகாண மட்டம் | 3 புள்ளிகள் | 2 புள்ளிகள் | 1 புள்ளி |

(உச்ச புள்ளிகள் 15)

(புள்ளி இடும் முறைக்கேற்ப புள்ளிகளை உறுதிப்படுத்துவதற்கு உரிய அனைத்து ஆவணங்களையும் சமர்ப்பித்தல் வேண்டும்.)